Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 277

செவ்வாய்க்கிழமை
30 ஓகஸ்ட் 2022

ஆவணி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

முச்சந்தி முரளி



"என்னதான் கணக்கு போட்டாலும் வரவு எட்டணா, , செலவு பத்தணா, கடைசியில எங்களுக்கு துந்தனா துந்தனா தானே"

இந்தியாவின் காற்றாலை மின்உற்பத்தி:

## மன்னாரில் நேற்றும் மக்கள் போராட்டம்




மன்னார், ஓக. 30
மன்னார் தீவுப் பகுதியில் இடம்பெற்று வருகின்ற கனியவள மண் அகழ்வு மற்றும் உயர் வலு கொண்ட காற்றாலை உற்பத்தி நிலையங்கள் 11

காற்றாலை மின்உற்பத்தி

## ஆட்சேபணை சான்றிதழ் கோரியது அமைச்சு

மன்னார், ஓக. 30
மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள இந்தியாவின் அதானி குழுமத்தின் காற்றாலை மின் உற்பத்தி செயற்றிட்டத்துக்கான ஆட்சேபணைச் சான்றிதழ். 11

கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு:

## அரிசிமா கலந்து பாண் உற்பத்தி

யாழ். மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கம் முயற்சி

யாழ்ப்பாணம், ஓக. 30
கோதுமை மாவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் பாண் உற்பத்தியை தொடர்ச்சியாக முன்னெடுப் 04

## பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்தி நாடு திரும்புகிறார் கோத்தாபய

கொழும்பு, ஓக. 30
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விரைவில் நாட்டுக்கு திரும்பவுள்ளாரென சிறிலங்கா பொது 04

## தமிழ் அரசியல் கைதி உ/த பரீட்சையில் சித்தி

கொழும்பு, ஓக. 30
க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய தமிழ் அரசியல் கைதி ஒருவர் சித்தியடைந்துள்ளார். பரீட்சைக்குத் 04

## 14 வயது மாணவனும் உயர்தரத்தில் சித்தி!

கொழும்பு, ஓக. 30
14 வயதில் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனைப் பற்றிய தகவலொன்று வெளியாகியுள்ளது. 04

மீண்டும் வரி விதிப்புக்கள் | செலவினக் குறைப்புக்கள்

# இடைக்கால பட்ஜெட் சபையில் இன்று

ஜனாதிபதி ரணில் முன்வைப்பு
கொழும்பில் போராட்டத்துக்கும் அழைப்பு

**கொழும்பு, ஓகஸ்ட் 30**

**இடைக்கால வரவு - செலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கும்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செலவினங்களை பலமடங்கு குறைக்கவுள்ளார் என்றும், வரி விதிப்புக்களை மீண்டும் நடைமுறைப்படுத்தவுள்ளார் எனவும் சர்வதேச செய்தி ஊடகமான றொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.** 11

கல்முனை விவகாரம்;

## தமிழ் - முஸ்லிம் மக்களை முரண்பட வைக்கிறார் ரணில்

கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 30
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் பகைமையை ஏற்படுத்துவதற்கும், தமிழ் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடும் ஒரு நிலைமையை உருவாக்குவதற்கும் ஒருசில இனவாத முஸ்லிம் அரசியல் தலைவர்களின் தூண்டுதலின் அடிப்படையில் செயற்படுகின்றாரா? - இவ்வாறு கேள்வி எழுப்பினார் தமிழ்த் 11

## கல்முனை விவகாரம்; வெள்ளிக்கு முன் தீர்வு

கொழும்பு, ஓக. 30
கல்முனை வடக்கு (தமிழ்ப்பிரிவு) பிரதேச செயலகத்தின் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கிடையில் தீர்க்கமானதொரு நல்ல முடிவை வழங்குவதாக பிரதமரும் உள்நாட்டலுவல் 04

## மாணவர்களுக்கு திரிபோஷா

கொழும்பு, ஓக. 30
பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவு மற்றும் திரிபோஷா போன்ற சத்துணவுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் 04

## காணாமல் ஆக்கப்பட்டோர் தினம்: தாயகத்தில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 30
சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு தமிழர் தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளால் இன்று கவனவீர்ப்புப் போராட்டங் 11

## பொருளாதார நெருக்கடியால் திருந்திவிட்டனரா 'குடிமக்கள்'?

கொழும்பு, ஓக. 30
நாட்டில் மதுபான விற்பனை வெகுவாகக் குறைந்துள்ளதாக இலங்கை மதுவரித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். 11

40 நிமிடங்களால்

## குறைகிறது மின்வெட்டு

கொழும்பு, ஓக. 30
இன்று முதல் எதிர்வரும் 2ஆம் 11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளை வஞ்சிக்கின்றது அரசாங்கம்

## இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 30

**தமிழ் அரசியல் கைதிகளை வஞ்சிக்கும் போக்கை அரசாங்கம் கைவிட்டு, நீண்ட காலமாகச் சிறையில் உள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் உடன் விடுவிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.**

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் அரசியல் கைதிகள் அல்லது போராளிகள் 20 தொடக்கம் 25 ஆண்டுகளை தடுப்பு காவலிலேயே கழித்துள்ளனர். ஆனால், அவர்களின் விடுதலை தொடர்ந்தும் இழுத்தடிப்பிலேயே இருந்து வருகின்றது. தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் எண்ணம் தற்போதைய ரணில் அரசாங்கத்துக்கு மாத்திரமல்ல, கடந்த காலத்தில் இருந்த எந்தவொரு அரசாங்கத்துக்கும் இருக்கவில்லை.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக ஒவ்வொரு அரசாங்கமும் தமிழ் மக்களுக்கு வாக்குறுதி அளிக்கின்ற போதிலும் அதனை ஒருபோதும் நிறைவேற்றியதில்லை. ரணில் விக்கிரமசிங்க மாத்திரமல்லாமல், கடந்த காலங்களில் அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதிகள் பொதுமன்னிப்பின் கீழ் சிலரை விடுதலை செய்துள்ளனர். அப்படியெனில், ஏன் நீண்டகாலம் சிறைவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அல்லது போராளிகளை விடுவிக்க முடியாது?

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி எந்தவொரு அமைச்சுப் பதவிகளையும் பெற்றுக்கொள்ளாது. வரவு - செலவுத் திட்டம் நாட்டு மக்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் இருக்கும் பட்சத்தில் அதனை ஆதரிப்போம். அத்துடன் மலையக மக்கள் உட்பட நாட்டு மக்களுக்கு குறித்த வரவு - செலவுத் திட்டம் பாதமாக அமையும் பட்சத்தில் அதனை எதிர்க்கத் தயங்க மாட்டோம். குறிப்பாக மலையக மக்களின் சம்பளம், காணி மற்றும் வீட்டு வசதிகள் உள்ளிட்ட பிரச்சினைகள் வரும் வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் தீர்க்கப்படவேண்டும் -என்றார். (ம)

# சர்வகட்சி விவகாரம்

## பதவி ஆசைக்காகவே சஜித்தின் பிடிவாதம்!

கொழும்பு, ஓக. 30

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாட்டைப்பற்றிச் சிந்திக்காமல் சுயநலமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே அவர் சர்வகட்சி அரசாங்கத்தில் இணையாமலுள்ளார் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவால் அண்மைக்காலமாக எந்தவொரு விடயத்திலும் திருப்தியடைய முடியாத நிலைமையே காணப்படுகிறது. அவர் மிகவும் சுயநலமாகவே சிந்திக்கின்றார். நாட்டைப் பற்றி சிந்திக்காமல், தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்துடனேயே அவர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். எதிர்க்கட்சித் தலைவர் பதவி பறிபோகும் என்ற அச்சமே சஜித் பிரேமதாஸ சர்வகட்சி அரசாங்கத்தில் இணையாமலிருப்பதற்கான காரணமாகும்.

தற்போதுள்ள நிலைமையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் பாதுகாத்துக் கொண்டு, நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே செயற்பட வேண்டும். சஜித் சிறந்த மனிதன். இணைந்து பணியாற்றினால் அனைத்து நெருக்கடிகளுக்கும் தீர்வுகாண முடியும் -என்றார். (ம)

# உள்ளூராட்சித் தேர்தல்: ஒத்திவைக்கத் தீர்மானம்

கொழும்பு, ஓக. 30

உள்ளூராட்சித் தேர்தலை மேலும் ஒரு வருடகாலத்துக்கு ஒத்திவைக்க அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிப்பு தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ள அதிகாரத்தின் பிரகாரம் எதிர்வரும் செப்ரெம்பர் 20ஆம் திகதிக்கு பின்னர் அது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படலாம். அத்துடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னர் கோரத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆயினும் அரசாங்கம் விரும்பினால் தற்போதுள்ள உள்ளூராட்சி சட்டத்தில் புதிய திருத்தம் கொண்டுவந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க முடியும் -என்றார்.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)



# சவேந்திரவுக்கு கௌரவப்பட்டம்

பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அஸ்கிரிய மகா விகாரையால் கௌரவப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

'மஹாமான்ய பிரதபாதிகேஷ்வர' என்ற கௌரவப் பட்டமே அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா நாடு, மதம் மற்றும் தேசிய பாதுகாப்புக்காக ஆற்றிய சேவைகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது என்று அஸ்கிரிய மகா விகாரை தெரிவித்துள்ளது. (ம)

# கோப், கோபா தலைமையை தருவதற்கு அஞ்சுவது ஏன்?

## சஜித் கேள்வி

கொழும்பு, ஓக. 30

கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைமைப் பதவிகளை எதிர்க்கட்சிகளுக்கு வழங்குவதற்கு அஞ்சுவது ஏன்? இவற்றின் தலைவர்களாக எதிர்க்கட்சியினர் நியமிக்கப்பட்டால் கொள்ளையர்கள் இனங்காணப்படுவார்கள் என்பதற்காகவே பொதுஜன பெரமுனவினர் இதற்கு தடையாகவுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மக்கள் சந்திப்பொன்றில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையிலலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது சர்வகட்சி அரசாங்கம் என்ற புதிய ஏமாற்று வேலைத்திட்டம் தொடர்பில் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த அரசாங்கத்தில் அமைச்சுப்பதவிகளை ஏற்குமாறு எமக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. ஆனால் எமக்கு அமைச்சுப்பதவிகள் வேண்டாம் என்றும், நாடாளுமன்றத்திலுள்ள பிரதான தெரிவுக்குழுக்களின் தலைவர் பதவியை வழங்குமாறும் வலியுறுத்துகின்றோம்.

இது சிறந்த முறைமையாகும். அதற்கமைய அமைச்சரவை ஒருபுறமும் செயற்பட, எதிர்க்கட்சி மறுபுறம் அந்தக் குழுக்களின் தலைமைத்துவத்தை ஏற்று செயற்படும். கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைமைத்துவத்தினை எதிர்க்கட்சிக்கு வழங்க இணக்கப்பாடு எட்டப்பட்டது. எனினும் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் இதற்கு எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர்.

கோப், கோபா குழுக்களின் ஊடாகவே கொள்ளையர்கள் இனங்காணப்படுவார்கள். இதனால்தான் அந்தப் பதவிகளை எமக்குத் தருவதற்கு அவர்கள் அஞ்சுகின்றனர் -என்றார். (ம)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்; இழப்பீடாக ரூ.9,110 லட்சம்

கொழும்பு, ஓக.29

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட இலங்கை மீனவர்களுக்கு இழப்பீடாக மேலும் 9 ஆயிரத்து 110 லட்சம் ரூபா கிடைத்துள்ளது என்று கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தக் கப்பலின் காப்புறுதி நிறுவனத்தினால் இந்த இடைக்கால இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் இந்தக் காப்புறுதி நிறுவனத்தால் இரண்டு தடவைகள் இடைக்கால இழப்பீட்டு தொகையாக 3 ஆயிரத்து 480 இலட்சம் மற்றும் 3 ஆயிரத்து 350 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கம்பஹா, கொழும்பு, களுத்துறை ம்மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்டுள்ள 15 ஆயிரத்து 32 மீனவர்களுக்கு இந்தத் தொகை பகிர்ந்தளிக்கப்பட உள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக பாதிக்கப்பட்ட அனைத்து மீனவர்களுக்கும் அவர்களின் படகுகளின் வகைகள், மீன் பிடிக்கும் முறை மற்றும் இழந்த வருமானம் என்பவற்றின் அடிப்படையில் 80 ஆயிரம் ரூபா முதல் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா வரையில் இழப்பீடு வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டிகைக்காலத்தில் அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதி தடைப்படும்!

### இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 30

பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வது தடைபடும் என அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்ததாவது:-

திறந்த கணக்கு முறையின் கீழ் அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பம் அடுத்த மாதம் முதல் கிடைக்காவிட்டால் மேற்படி பொருள்களுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்படும். இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக கடந்த இரண்டு மாதங்களில் சந்தையில் பொருள்களின் விலை சற்றுக் குறைந்துள்ளது. எனவே, திறந்த கணக்கு முறை நீக்கப்படாவிட்டால் பிரச்சினை ஏற்படும். அதன் பின்னர் இறக்குமதி செய்வதற்கு போதுமான அந்நியச் செலாவணி வங்கிகளிடம் இல்லை - என்றுள்ளது. (ம)

## போஷாக்கின்மை காரணமாக 40,000 பேர் மருத்துவமனையில்

### உணவுக்காக விபசாரமும் செய்யும் நிலை அரசாங்கத்துக்கு எதிராக ஐ.ம.ச. கொதிப்பு



கொழும்பு, ஓக. 30

**பொருளாதார நெருக்கடிகளின் காரணமாகவும், உணவுத்தட்டுப்பாடு காரணமாகவும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட சுமார் 40 ஆயிரம் பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அத்தியாவசிய பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் விரைவாக அதிகரித்துச் செல்கின்றது. பாண், கோழி, உரம், மண்ணெண்ணெய், அரிசி மற்றும் சீனி உள்ளிட்ட மேலும் பல பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான செலவு 650 சதவீதத்தினால் உயர்வடைந்துள்ளது. உலக வங்கியின் தரப்படுத்தலில் உணவுப் பணவீக்கம் அதிகமாகவுள்ள நாடுகள் பட்டியலில் இலங்கை 5 ஆவது இடத்திலுள்ளது. ஜூன் மாதம் 58 சதவீதமாகக் காணப்பட்ட உணவுப் பணவீக்கம், ஜூலையில் 66 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. இந்த நிலைமையினால் ஒரு வேளை உணவைக்கூட உட்கொள்ள முடியாத 40 ஆயிரம் பேர் உடல் நலக்குறைவினால் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அது மாத்திரமின்றி பொருளாதார சுமைகள் காரணமாக விபசாரம் 30 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக ஏ.என்.ஐ. குறிப்பிட்டுள்ளது. பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை வகித்தவர்களை இலக்கு வைத்து வேட்டை நாய்களைப் போன்று சுற்றிக் கொண்டிருக்கின்றனர். அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களைப் பாதுகாப்பதற்கான பொறிமுறையொன்று உருவாக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கொள்கை விளக்கவுரையில் தெரிவித்திருந்தார். எனினும் இதுவரையில் அதற்கான நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. ஆர்ப்பாட்டங்கள் இன்னும் நிறைவடையவில்லை. அவை அவ்வப்போது தலைதூக்கும். நாம் அவற்றுக்காக முன்னிற்போம் - என்றார். (ம)

## பொருளாதார நிலை தொடர்பில் எம்.பிக்களுக்குத் தெளிவூட்டல்!

கொழும்பு, ஓக. 30

'இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் முன்னோக்கிய வழி' எனும் தலைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தெளிவூட்டலும் கலந்துரையாடலும் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை நாடாளுமன்ற குழு அறை இலக்கம் 1இல் நடைபெறவுள்ளது என்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

கலந்துரையாடல், நிதி விடயங்கள் தொடர்பான எதிர்கால நாடாளுமன்ற விவாதங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வினைத்திறனாக பங்குபற்றுவதற்கு பயனுள்ள வகையில், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் முன்னோக்கியவழி பற்றிய உரையாடலுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்படவுள்ளது. அத்துடன் இந்தக் கலந்துரையாடலை இலங்கை மத்தியவங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நடத்தவுள்ளார். என்றுள்ளது. (ம-14)

## காகிதச் செலவுகளை கட்டுப்படுத்தத் திட்டம்

கொழும்பு, ஓக. 30

பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, ஆண்டுதோறும் காகிதத்துக்காகச் செலவிடும் கணிசமான பணத்தைச் சேமிக்கத் தீர்மானித்துள்ளது.

உதாரணமாக, வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பிப்பதற்கு அரச அதிகாரிகள் பயன்படுத்தும் ஏ4 அளவை விட பெரிய 4 பக்க விண்ணப்ப படிவத்தை ஏ4 தாளில் 2 பக்கங்களாகக் குறைப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது. அரச சேவையில் அமுல்படுத்தப்படும் சிக்கனக் கொள்கையின் அடிப்படையில் விடய தான அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் ஆலோசனைக்கு அமைய இந்த விடயம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே தெரிவித்துள்ளார். (ம)

## சர்வதேசத்தின் உதவிகளுடன் மாணவர்களுக்கு உணவூட்டல்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 30

ஐரோப்பிய ஒன்றியம், யுனிசெப் அமைப்பு மற்றும் நியூஸிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் இணைந்து பாடசாலை மாணவர்களின் போஷாக்கினை உறுதிப்படுத்தும் வகையில் உணவு வழங்கும் வேலைத்திட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

பாடசாலை மாணவர்களின் போஷாக்கை உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கத்தினால் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்காக 3 ஆயிரம் தொன் துவரம் பருப்பு அமெரிக்காவிடமிருந்து கிடைத்துள்ளது. ஆயிரத்து 700 தொன் 'ரின் மீன்' கிடைக்கப்பெறவுள்ளது. 'சிறுவர்களை பாதுகாப்போம்' அமைப்புடன் கல்வி அமைச்சின் போஷாக்கு வேலைத்திட்ட பிரிவு ஒன்றிணைந்து பாடசாலைகளில் உணவு வழங்கும் வேலைத்திட்டத்தினை நாடளாவிய ரீதியில் முன்னெடுத்துள்ளோம்.

ஆரம்பப் பிரிவில் 16 லட்சத்து 40 ஆயிரம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அவர்களுக்கான உணவு வழங்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக பல்வேறு தனியார் நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இதற்கு முன்னர் பாடசாலைகளில் மதிய உணவு வழங்கப்படாத பாடசாலைகளிலும் அதற்காக வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)

## 10 இலட்சம் அரச அலுவலர்கள் வினைத்திறன் அற்றவர்கள்!

### அமைச்சர் ரொஷான் ரணசிங்க விளாசல்

கொழும்பு, ஓக. 30

நாட்டிலுள்ள 16 லட்சம் அரச உத்தியோகத்தர்களில் சுமார் பத்து லட்சம் பேர் எந்தவொரு வினைத்திறனான சேவையையும் வழங்கவில்லை என அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் பகுதியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச சேவையை அரச உத்தியோகத்தர்களே விமர்சிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரச அலுவலர்களுக்கு எதிராக ஜனாதிபதியும் அமைச்சர்களும் அண்மைக்காலமாக கடும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். முன்னதாக, 'வினைத்திறனான பணியை வழங்க முடியாவிட்டால் அரச அலுவலர்கள் பணியில் இருந்து விலகலாம். அவர்களை சுமையாக வைத்துக்கொண்டு உணவளிக்க முடியாது' என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அதேபோன்று, எரிசக்தி அமைச்சர் காஞ்சனவும், அரச அலுவலர்களுக்கு எதிராகக் கடும் கருத்துக்களை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மீனவர்களுக்கு நேற்றுமுன்தினம் மண்ணெண்ணெய் பகிர்ந்தளிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்ப்பாணத்தில் பெருமளவு மீனவர்களுக்கு நேற்றுமுன்தினம் மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இளவாலை, சேந்தான்குளம், மயிலிட்டி, வலித்தூண்டல், கீரிமலை, பருத்தித்துறை பகுதிகளைச் சேர்ந்த மீன்பிடிச் சங்கங்களுக்கு மேற்படி மண்ணெண்ணெய் முன்னுரிமை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மீனவருக்கும் தலா 30 லீற்றர் என்ற வகையில் மண்ணெண்ணெய் பகிரப்பட்டுள்ளது. (ம-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆஸி. செல்ல முற்பட்ட 17 நபர்கள் கைதாகினர்

## பருத்தித்துறை கடற்பரப்பில் சம்பவம்

**யாழ்ப்பாணம், ஓக. 30**

**சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 17 பேர் பருத்தித்துறை முனைப்பகுதியில் வைத்து நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டனர் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

குறித்த நபர்கள் சிலாபம் பகுதியில் இருந்து வந்து கடந்த 5 நாள்களாக பருத்தித்துறைப் பகுதியில் தங்கியுள்ளனர் என்று பருத்தித்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

நாட்டில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடிகளை அடுத்து சட்டவிரோதமாகப் பலர் நாட்டை விட்டு வெளியேறும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. கடல்வழியாக இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு பலர் பயணப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு அவுஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதப் பயணத்தை மேற்கொள்ளவிருந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-14-27-26)



# விடுதியில் தீ விபத்து: உடைமைகள் எரிந்தன

*யாழ்ப்பாணம், ஓக. 30*

*யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல தனியார் விடுதியின் அறையொன்றில் நேற்றுமுன்தினம் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.*

*விடுதி அறையில் உள்ள குளிரூட்டியில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாகவே குறித்த தீ விபத்து ஏற்பட்டது என்றும், இதனால் கனடா நாட்டில் இருந்து வருகைதந்து விடுதியில் தங்கியிருந்தவர்களின் உடைமைகள் எரிந்து நாசமாகியுள்ளன என்றும் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது. (ம-14-27-26)*

# தர்மலிங்கத்தின் நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஓக. 30

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் 37ஆம் ஆண்டு நினைவுதினம், தாவடியில் அமைந்துள்ள அவரது நினைவுத்தூபியில் எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் அஞ்சலி உரையை இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஆற்றவுள்ளார். (ம-14)

# அம்புலன்ஸுக்கு இடையூறு: சாரதிப் பத்திரத்துக்குத் தடை

கிளிநொச்சி, ஓக. 30

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம் பொக்கணைப் பகுதியில் நோயாளர் காவுவண்டி செல்வதற்கும் பொலிஸாருக்கும் இடையூறு விளைவித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்துள்ளார். (ம-14-113)

# புலம்பெயர்ந்தோர் முதலீட்டால் பச்சிலைப்பள்ளி முன்னேற்றம்!

கிளிநொச்சி, ஓக. 30

புலம்பெயர்ந்த முதலீட்டாளர்களால் பச்சிலைப்பள்ளிப் பிரதேசம் பல விதங்களில் முன்னேற்றம் கண்டுள்ளது என்று பச்சிலைப்பள்ளி பிரதேசபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார்.



பச்சிலைப்பள்ளி பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பச்சிலைப்பள்ளியில் வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் உற்பத்தித் தொழிற்சாலைகளின் வரவு அதிகரித்திருக்கின்றது. இதனால் எமது பிரதேசத்துக்கு அதிக நன்மை கிடைக்கப்பெற்றிருக்கின்றது. எனவே பச்சிலைப்பள்ளி பிரதேசசபை எல்லைக்குள் புலம்பெயர் முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றேன். அத்துடன் முதலீட்டுக்கான வாய்பை உருவாக்கவும் வசதிகளை ஏற்படுத்தவும் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் - என்றார். (ம-14-13)

### மாணவர்களுக்கு...

முன்னெடுத்துள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று திங்கட்கிழமை சபையில் தெரிவித்தார். (அ-ஒ-இ)

### கல்முனை...

கள் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன உறுதியளித்துள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலக விவகாரம்; தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவைதானும் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசனும் சந்தித்துச் கலந்தரையாடிய வேளையிலேயே இதனை பிரதமர் தெரிவித்தார் என்றும் அவர் கூறினார்..

நாடாளுமன்றத்தில் நேற்று சுமார் 15 நிமிடங்கள் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், கல்முனை வடக்கு (தமிழ்ப் பிரிவு) பிரதேச செயலகம் தொடர்பான குழப்பநிலை மற்றும் அண்மைய பொது நிர்வாக அமைச்சின் இணையத்தளத்திலிருந்து கல்முனை தமிழ்ப் பிரிவு அகற்றப்பட்டமை, நீண்டகாலமாக இருந்து வருகின்ற கணக்காளர் நியமிக்கப்படாத பிரச்சினை, காணிப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பிரதமருக்கு விளக்கமளிக்கப்பட்டது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார். (அ-ஒ-22)

### அரிசிமா...

பதற்கு, அரிசிமாவை கலந்து செய்வதற்கான உத்திகள் தொடர்பில் ஆராய்கின்றோம். அந்த முயற்சி வெற்றியளித்தால், 50:20 என்ற அடிப்படையில் அரிசிமாவையும் கலந்து பாண் உற்பத்தியை தங்கு தடையின்றி மேற்கொள்வோம் - இவ்வாறு யாழ். மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கத் தலைவர் க.குணரட்ணம் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகசந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோதுமை மாவுக்கு நிர்ணய விலை இல்லாமையால் அதன்விலை அதிகரித்துள்ளது. கொழும்பில் கோதுமை மா விலையேற்றம் மற்றும் தட்டுப்பாட்டால் 2 ஆயிரம் வெதுப்பகங்கள் மூடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ கோதுமை மா 360 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. எதிர்வரும் நாள்களில் பாணில் விலையை அதிகரிக்க நேரிடும். பாணின் விலையை அதிகரிக்காத வெதுப்பக உரிமையாளர்கள் அதன் நிறையைக் குறைப்பார்கள். இதனால் குழப்பங்கள் ஏற்படக்கூடும்.

இந்த நிலைமை தொடர்ந்தால் 15 நாள்களில் யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து வெதுப்பகங்களும் மூடப்படவேண்டிய நிலைமை வரலாம். இந்தியாவிலிருந்து கிடைக்கப்பெற்ற கோதுமை மா மூலமே பேக்கரி உற்பத்தி தக்கவைக்கப்பட்டது - என்றார். (அ-ஒ-27)

### பாதுகாப்பு...

ஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'கோத்தாபய விரைவில் நாட்டுக்கு வருவார். அவர் இலங்கையை அழகான சூழலில் விட்டுச் செல்லவில்லை. மீண்டும் வந்தால் அவர் இங்கு இருக்க வேண்டும். ஒரு முன்னாள் ஜனாதிபதிக்கு பொருத்தமான அதே பாதுகாப்பு மற்றும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. தேவையான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர் மிக விரைவில் நாடு திரும்புவார்' - என்றார். (அ-ஒ-இ)

### தமிழ்...

தோற்றிய தமிழ் அரசியல் கைதியான 38 வயதுடைய கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர், புவியியல், இந்து நாகரிகம், தமிழ் மொழி ஆகிய பாடங்களில் சித்தியடைந்துள்ளார். (அ-ஒ-இ)

### 14 வயது...

கடவத்த பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட தெவும் சனஹஸ் ரணசிங்க என்ற மாணவன், வர்த்தகப் பிரிவில் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியிருந்ததோடு, மூன்று பாடங்களிலும் 'பி' சித்திகளைப் பெற்றுள்ளார்.

5 மாத குறுகிய காலத்தில் பரீட்சைக்குத் தயாராகி இந்த விசேட சித்தியைப் பெற்றதாக அவர் குறிப்பிட்டார்.

தெவும் சனஹஸ் ரணசிங்க இதற்கு முன்னர் 8ஆம் ஆண்டில் கல்வி கற்கும்போது சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார். 7 மாத குறுகிய காலத்தில் தயாராகிய தெனவும் சனஹஸ் ரணசிங்க, சாதாரணத்தர பரீட்சையிலும் சித்தியடைந்திருந்தார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பிரேரணைகளைக் கண்டு ஏனிந்தப் பயம்?

'பிரேரணைகள் மூலம் இனங்களுக்கு இடையே நல்லுறவை ஏற்படுத்த முடியாது. பிரேரணைகள் இனங்களுக்கு இடையே விரிசலையும் குந்தகத்தையுமே ஏற்படுத்துகின்றன' – என்றவாறாகத் தெரிவித்திருக்கின்றார் நாடாளுமன்றத்தில் 'சுயாதீனமாகச் செயற்படும் நபர்' என்று தன்னை அடையாளப்படுத்தியிருக்கும் விமல் வீரவன்ஸ எம்.பி.

'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில், இலங்கைக்கு எதிராக மேலதிகமாக பிரேரணைகள் கொண்டு வரப்படலாம். அந்தப் பிரேரணைகளில் அவசரகாலச் சட்ட நடைமுறை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதுகள் மற்றும் தடுத்துவைத்தல்கள் என இலங்கையில் சமீபத்திய பதற்றம் மிக்க சூழலும் பேசுபொருள் ஆகலாம்' என்று கருதப்படும் நிலையில்தான், புதிய பிரேரணைகள் வேண்டாம் என்றவாறாகவும், இலங்கைக்கு எதிராகப் பிரேரணைகளுக்குப் பதிலாக சர்வதேசத்தின் உதவிதான் தேவை என்றும் இயம்பியிருக்கின்றார் வீரவன்ஸ.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, மேற்கத்தைய நாடுகளின் கூட்டணி, ஈழத்தமிழர்களின் விடயத்தில் இந்தியத் தலையீடு இவையெல்லாம் வீரவன்ஸவுக்குக் 'குருசைக் கண்ட பேயின்' நிலைதான். ஆதலால், அவர் இவ்வாறானதொரு கருத்தை வெளிப்படுத்தியதில் ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை. ஆனால், இன நல்லிணக்கம் என்ற வார்த்தையை உச்சரிப்பதற்கு விமல் வீரவன்ஸவுக்கு குறைந்தபட்சமேனும் தகுதி – திராணி – இருக்கின்றதா? என்பதை ஒட்டுமொத்த உலகமும் நன்கறியும்.

ராஜபக்சக்களின் இனவாத அரசியலின் வலது கரமே விமல்தான். 'இனவாதமும் மதவாதமும்'தான் விமலின் அரசியலையும், நாடாளுமன்றப் பிரவேசங்களையும் தீர்மானித்துக் கொண்டிருக்கின்றன. அவைதான் அவரின் வாக்குவங்கி. பஸிலுடனான முறுகலுக்குப் பின்னர் அமைச்சுப் பதவிகளை கோத்தாபய பறித்தெடுத்த பின்னர்தான் 'சுயாதீன உறுப்பினர்' என்ற சிந்தாந்தத்தைக் கையிலெடுத்தார் விமல். காலிமுகத்திடல் போராட்டக் காலத்தில் இனவாதம் இந்த நாட்டில் செல்லாக்காசாகிக் கொண்டிருந்தபோது, இருக்கும் இடம் தெரியாமல் இருந்த விமல் இந்தப் போராட்டக்காலத்தின் முன்னர் என்னவெல்லாம் செய்தார், எதையெல்லாம் பேசினார் என்பது ஒன்றும் இருண்மை நிலையல்ல. அதை வீரவன்ஸவால் கூட மறைக்கவும் – மறுக்கவும் – மறக்கவும் முடியாது.


பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்காமல், இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை வலியுறுத்திப் பொறிமுறைகள் மற்றும் தீர்மானங்கள் உருவாக்கப்படாமல், சர்வதேசத்தின் வெறும் அபிவிருத்தித் திட்டங்கள் எவ்வாறு இனங்களுக்கு இடையிலான அமைதியையும் நல்லிணக்கத்தையும் தீர்மானிக்கும்? என்ற தெளிவுபடுத்தலை வீரவன்ஸதான் வெளிப்படுத்தவேண்டும். இத்தகையவர்களின் மடமைத்தனமாக வழிப்படுத்தல்களும் பேச்சுக்களும் சிந்தனைகளும் – செயல்களும்தான் இந்த நாடு இன்று பேரிழிவான நிலைக்குள் வீழ்ந்து கிடப்பதற்கு ஒற்றைக் காரணம். உண்மையில் போராட்டங்களின் மூலம் அகற்றப்பட வேண்டியவர்கள் இவர்கள்தான். இத்தகைய வக்கிரச்சிந்தனையாளர்களைத் துடைத்தெறிந்தால் மட்டுமே இலங்கைக்கு இனியாவது ஓர் ஒளிமயமான எதிர்காலம் இருக்கும்.

கனடாவில் மிஷனரிகளால் கொல்லப்பட்ட பூர்வகுடிகளுக்கு நீதிகோரி அண்மையில் ஒட்டுமொத்த கனடாவும் வீதிக்கு இறங்கியது. வெறுமனே பூர்வகுடிகள் மட்டும் அந்தப் போராட்டங்களில் பங்கெடுக்கவில்லை. ஓர் தேசியப் பிரச்சினையாக அது பார்க்கப்பட்டது. அதுதான் அந்த நாட்டின் வெற்றி – எழுச்சி. அந்தச் சிந்தனையும், மனப்பாங்கும் இல்லாதமையால் தான் எல்லா வளங்களும் இருந்தும்கூட, எதுவுமே அற்றவர்களாக இலங்கையர்கள் யாசகம் ஏந்திக் கொண்டிருக்கிறார்கள்.

தீர்மானங்கள், வரைவுகளால் ஏற்படும் 'அச்சம்', 'பதற்றம்', 'பீதி' என்பனவும் கொழும்பின் குற்றங்களை மெய்ப்பிக்கத்தானே செய்கின்றன. மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயமிருக்கும்.

### நாளொரு நல்வார்த்தை

"உலக சரித்திரத்தில் காணப்படும் சாதனைகள் அனைத்தும் உற்சாகத்தின் வெற்றிச் சின்னங்களே" - **எமர்ஸன்**



# அமைச்சுகள் தராவிடின் பட்ஜெட்டை எதிர்ப்போம்

## பெரமுனவினர் போர்க்கொடி

**கொழும்பு, ஓக. 30**

**இராஜாங்க அமைச்சு நியமனத்தில் பொதுஜன பெரமுனவுக்கு முன்னுரிமை வழங்காவிடின், இடைக்கால வரவு-செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களிப்போம் என்று பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பஸில் ராஜபக்சவிடம் தெரிவித்துள்ளனர் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்காவிடின் இவ்வாரத்துக்குள் நிலையான அமைச்சரவையை ஸ்தாபிக்குமாறு பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார். தற்காலிக அமைச்சரவையில் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகமாக, நிலையான அமைச்சரவையில் பொதுஜன பெரமுனவின் 16 உறுப்பினர்களுக்கு முக்கியமான அமைச்சுப் பதவிகளை வழங்கவேண்டும் என பெரமுன ஜனாதிபதியை வலியுறுத்தி வருகின்றது. இந்த நிலையிலேயே இராஜாங்க அமைச்சு நியமனத்திலும் பெரமுனவை முன்னிலைப்படுத்தாவிடின் வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்போம் என்று பெரமுன தெரிவித்துள்ளது.

அதேநேரம், சர்வகட்சி அரசாங்கத்தில் அமைச்சரவை அமைச்சுகளை 18ஆக வரையறுக்க வேண்டும் என்றும், இராஜாங்க அமைச்சு நியமனம் அவசியமற்றது என்றும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஊழலற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு 102 ஆவது இடம்

கொழும்பு, ஓக. 30

ஊழலற்ற நாடுகள் தொடர்பான மதிப்பாய்வொன்றில் இலங்கை 102 ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் நிறுவனத்தின் மிக சமீபத்திய ஊழல் மதிப்பாய்வுச் சுட்டியின் அடிப்படையிலேயே இந்தத் தரவிறக்கம் வழங்கப்பட்டுள்ளது. 180 நாடுகளைக் கருத்திற் கொண்டு இந்த மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'ஆட்சியை வலுப்படுத்தவும் ஊழல் செயற்பாடுகளைக் குறைக்கவும் இலங்கை முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்' என ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ம)

**நாளை** **31.08.2022** புதன்கிழமை ஆவணி 15

சுபநேரம் : 04.35 -06.05
ராகுகாலம்: 12.05 - 01.35

விநாயகர் சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்துக்கு எதிராக அரசின் ஆயுதம் பயங்கரவாத தடைச்சட்டம்

## சர்வதேச ரீதியில் இலங்கைக்கு ஆபத்து பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 30**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள பின்னணியில், அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை முடக்குவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இனி வரும் காலங்களில் இலங்கை சர்வதேச மட்டத்தில் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சரான அவர், கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக கைவிடப்பட்டு, தேசியப் பாதுகாப்பு நிமித்தம் நடைமுறைக்கு பொருந்தும் வகையிலான சட்டம் உருவாக்கப்படும் வரை தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டம் எக்காரணிகளுக்காகவும் பயன்படுத்தப்படமாட்டாது என சர்வதேச சமூகத்துக்கு வாக்குறுதி வழங்கியுள்ள நிலையில் தற்போதைய அரசாங்கம் ஜனநாயகத்துக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அடக்குமுறையினை முன்னெடுக்கின்றமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் மாதம் இடம்பெறவுள்ள நிலையில் ஜனநாயகத்துக்கு எதிரான வகையிலான அடக்குமுறைகளை அரசாங்கம் பிரயோகிக்கிறது. இனிவரும் காலங்களில் இலங்கை சர்வதேச மட்டத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்க்கொள்ளும்.

நாட்டில் மனித உரிமைகள், சட்டவாட்சிக் கோட்பாடு ஆகியவற்றை செயற்படுத்துமாறு சர்வதேச சமூகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற நிலையில் நாட்டில் அதற்கு முற்றிலும் வேறுபட்ட தன்மையே காணப்படுகிறது. போராட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் நோக்கில் நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் இருதரப்புப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகள் நாட்டில் இடம்பெறுவதை சர்வதேசம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது.

சட்டத்துக்கு முரணாக செயற்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது. சாதாரண சட்டத்தின் கீழ் அனைத்து விசாரணை நடவடிக்கைகளையும் எடுக்கலாம் - என்றார். (ம)



## திருக்கோணேஸ்வர ஆலயத்தின் மீதான நிர்மாணப் பணித்தடைக்கு நடவடிக்கை!

*கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவிப்பு*

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் நிர்மாணப் பணிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற தடை தொடர்பில், தொல்பொருள் அமைச்சின் கவனத்துக்குக்கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் மனவிதான உறுதியளித்தார் என்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்துள்ளார்.

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் மனவிதானவுக்கும் நல்லை ஆதீன முதல்வர் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோருக்கும் இடையிலான விசேட சந்திப்பு நல்லை ஆதீனத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் மேற்கண்டவாறு உறுதியளித்தார் என்று கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மாளிகைக்கு அருகிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் மூன்று கோயில்கள் நீண்ட காலமாக பூஜை வழிபாடுகள் இடம்பெறாது உள்ளன. எனவே அந்த மூன்று கோயில்களிலும் உடனடியாக பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருக்கின்றோம். அதேபோல் கீரிமலையில் சமாதிகள் சிலவும் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றையும் பெற்றுத்தருவதற்கு உதவவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது. மேலும் முல்லைத்தீவு குருந்தூர் மலையில் சில கட்டுமானப் பணிகள் இடம்பெறுகின்றன. இதுபோன்ற விடயங்களை நிறுத்தி உரிய தீர்வைப்பெற்றுதர வேண்டுமென தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது -என்றார். (ம-14)

# உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

*கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டன. கிடைக்கப்பெற்ற பாடசாலைகளின் பரீட்சை முடிவுகள் வருமாறு:-*

### யா/அளவெட்டி அருணோதயா கல்லூரி

**கணிதப்பிரிவு**

சி.சஜீவன் - 3ஏ, அ.அனுசாந்தன் - 3ஏ, கி.அனிஸ்ரனா -3ஏ, உ.ரஜனா -2ஏபி, அ.விதுசன் - ஏ2பி, தே.அபர்ணன் - ஏ2சி, சு.திஷாந் - 3சி, ஆ.மதுசன்-சி2எஸ், இ.மிதுலா - 2சிஎஸ், சி.கீர்த்தன் - சி2எஸ், சி.துளசிகா - 2சிஎஸ்

**உயிரியல்பிரிவு**

கே.குந்தவி - 2பிசி, உ.ஜதுஷா - பி2சி, ப.திலக்ஷனா- 2சிஎஸ், பி.ஶ்ரீஜனனி - சி2எஸ், த.வினிதன் - 3எஸ், சி.டயாணி - சி2எஸ், சி.அபினயா -சி2எஸ்

**வர்த்தகப்பிரிவு**

கு.ஜெசிலிஜெனஸ்ரிகா - 3ஏ, சி.பிரியா - ஏ2பி, சி.அபிசனா - 2பிசி, த.அரங்கயன் - 2பிசி, சி.சிவதர்சினி - 2பிசி

**கலைப்பிரிவு**

பி.துவாரகன் - 2ஏபி, அ.மோனிக்கா டிஜித் - 2ஏஎஸ், அ.ரபீனா - ஏ2பி, வி.ருஷான் - ஏபிசி, பு.சங்கீர்த்தா - 3பி, ச.தேனுஷா - 3பி, த.பிரியா - 2பிசி, லோ.தனுப்பிரியா - 2பிசி, வ.தர்சன் - 2பிசி, செ.யூதித் - 2பிசி, நி.மதுஷா- 2பிசி, சி.சுபகரன் - பி2சி, கி.டினோஜன் - பி2சி, கு.கேசிகா - பி2சி, சௌ.சமீனா - ஏசிஎஸ், செ.உஷானி 2பிஎஸ், இ.டிலக்சனா - பி2சி

### யா/வரணி மத்திய கல்லூரி

**வர்த்தகப்பிரிவு**

வ.யாழவன் - 3ஏ, க.ஜானுசா - 2ஏசி, செ.ரனுஜா - 2 ஏபி

**கணிதப்பிரிவு**

இ.நிகர்சன் - 2ஏபி

**கலைப்பிரிவு**

யோ.செந்தூரி - 2ஏபி, சா.மாதுஜா - 2ஏபி, உ.கஜானா - ஏ2பி, செ.ஜிந்துசா - ஏபிசி, ர.சாருகா - ஏபிசி

**உயிரியல் பிரிவு**

ந.ஜருசா - 2சிஎஸ், சி.யாழரசன் - 2சிஎஸ், ர.மதுசனா - 3சி

### யா/வட்டு மத்திய கல்லூரி

**வர்த்தகப்பிரிவு**

ஜெ.பரிதி - 3ஏ

**கலைப்பிரிவு**

பி.அச்சுதன் - ஏ2பி, சி.சாருபன் - 3பி, த.அனுஜா - ஏபிசி, ம.ஜெயசுதன் - பி2சி, ஜெ.நிருத்திகா - பி2சி, சி.கிருசாந்தி - பி2சி, ம.மயூரியா - 2பிசி, இ.அனோஜன்- 3சி, ஞா.ஏஞ்சலா - பிசிஎஸ், யோ.மீனலோஜினி -2சிஎஸ், க.கோபிகா - 2சிஎஸ்; பி.மித்சனா - 3எஸ்

### யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.

மோ.கீர்த்தனா - 3ஏ, அ.வேணுசா - 2பிசி, சி.பவதாரணி - ஏ2பி

### வவுனியா தமிழ் மத்திய ம.வி.

**விஞ்ஞானப்பிரிவு**

சி.கஜானன் - 3ஏ, ப.அருள்நேசசர்மா - 3ஏ, சி.விதுசன் - 3ஏ, இ.மதுமிதன் - 2ஏபி, சி.திவ்வியா - 2ஏபி, இ.கிசாலினி -2ஏபி

**கணிதப்பிரிவு**

சே.யதீஸ் -3ஏ, து.தயானந்தன் - 3ஏ, வி.ஜோன் பிரவீன் - 3ஏ, ஜெ.சிவசுதன் - 3ஏ, மோ.யாகவன் - 2ஏபி, அ.சன்சில்ராஜ் - 2ஏபி, மு.கிசோத்மன் -2ஏபி

**உயிரியல் தொழில்நுட்பப் பிரிவு**

யு.கிங்சிலி - 2ஏபி, பா.யூட் டெனிஸ்ரன் - ஏபிஎஸ்

**பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு**

மொ.மபாஸமலிக் - 2பிசி, கி.குணநீதன் - 2பிசி, வி.குணசீலன் - 2பிஎஸ்

**வர்த்தக பிரிவு**

ச.கிசாத் - 3ஏ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 05 . 1980



மறைவு 28 . 08 . 2022

## திருமதி உஷாஜினி ஜனார்த்தன்

மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உஷாஜினி ஜனார்த்தன் அவர்கள் கடந்த (28.08.2022) ஞாயிற்றுக் கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் பத்மநாதன் - புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகளும், ஜெயபாலன் - அமரர் தவமலர் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜனார்த்தனின் அன்பு மனைவியும், திவாகினி, கிருஷாயினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், வித்தியாயினி, ஜெயப்பிரதீபன், தனுஷாயினி, சிந்துஜன் ஆகியோரின் சகோதரியும், பிரசாந்தன், மயூரதன் ஆகியோரின் மைத்துனியும், சங்கரப்பிள்ளை கணநாதனின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2022) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4.00 மணிக்கு தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**கணவர் மற்றும் குடும்பத்தினர்.**

**077 248 7144**
**077 028 0442**

# மரண அறிவித்தல்

பிறப்பு 04 - 07 - 1937



இறப்பு 27 - 08 - 2022

## நாகமுத்து சின்னத்துரை

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சின்னத்துரை அவர்கள் கடந்த (27.08.2022) சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து பொன்னம்மா தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கேமாவதி மற்றும் பிரபாகரன் (கனடா), கிருபாகரன் (இலங்கை), காலஞ்சென்ற பிரேமாவதி மற்றும் கேசலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் அளவெட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**பிரபாகரன் - மகன் (கனடா)**

**416 276 8727**
**647 343 6789**

(CS 46234) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 04 . 1955



மறைவு 26 . 08 . 2022

## திருமதி சந்திரலேகா சகாதேவன்

யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சந்திரலேகா சகாதேவன் கடந்த (26.08.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரையப்பா இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சகாதேவன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜெயவீரசிங்கம், திசவீரசிங்கம் மற்றும் கமலாதேவி, தவமணிதேவி (ராணி), சரோஜினிதேவி (சரோ), செல்வராணி (கிளி) ஆகியோரின் சகோதரியும், சங்கர், சுதாகர், ஷாமினி, சுதர்சினி, கஜீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தாட்சாயினி, ஜெயமோகனா, சஞ்சீவ், சுதாபவான் ஆகியோரின் மாமியாரும், சாய்பிரவீன், அனன்யா, சேகரன், மேனுஜா, சகானா, சானுயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.08.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி பிராமண உயர்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 5 மதவடி லேன், திருநெல்வேலி.**

**தகவல் : குடும்பத்தினர்**
**சுதா - 077 662 5143**
**சங்கர் - 077 729 3248**

(cs.20543) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 04 . 1955



மறைவு 16 . 08 . 2022

## திருமதி நாகேஷ்வரி விவேகானந்தன்
### (சேளி அக்கா)

யாழ் கொல்லன்கலட்டியை பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகேஷ்வரி விவேகானந்தன் (சேளி அக்கா) அவர்கள் 28.08. 2022 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் கொல்லன்கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை விவேகானந்தன் அவர்களின் அன்பு மனைவியும் Dr.சாந்தினி (இங்கிலாந்து), ஹறிகரன் (பிரான்ஸ்), கெங்கா - பாலதயாளன் (ஆசிரியை பரிதோமாவின் கல்லூரி, கல்கிசை), ரூபினி (தென்னாபிரிக்கா), ஹறிராம் (இங்கிலாந்து), மனோவதனி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராஜசூரியர், தர்மராணி, பாலதயாளன், தெய்வேந்திரன், பகீரதி, யோகானந்தன் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற மகேஷ்வரி பரமசிவம், பரஞ்சோதி, பரமேஷ்வரி (ரோகிணி - ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற அருளானந்தம் (கனடா), காலஞ்சென்ற சிவானந்தன், காலஞ்சென்ற காசியானந்தன், சர்வானந்தன் (நோர்வே) ஆகியோரின் மைத்துனியும், சிவகுமார் (CTB - சிங்கப்பூர்), சிவகுகன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சிவசங்கர் (சாங்கர் - தெல்லிப்பழை), இராகுலன் (அவுஸ்திரேலியா), இராகவன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற ரவிந்தன் (Father.ரவி), அனுஷியா (பிரான்ஸ்), ஜெயசீலன் (தெல்லிப்பழை), பத்மஜா (ஐக்கிய அமெரிக்கா), பங்கஜா (ஐக்கிய அமெரிக்கா), கோகுலகாந் (சம்பியா), அம்புஜா ஆகியோரின் பெரிய தாயாரும், Dr.கிருஷ்ண காயத்திரி (Uk), பிரணவன் (Uk), அஷ்வினி, (பிரான்ஸ்), ஆனந் (பிரான்ஸ்), Dr.யாதேவ் (கொழும்பு), அபிராம் (அவுஸ்திரேலியா), சாரங்கன் (கொழும்பு) , Dr. கௌசல்யா (ஆஸ்திரேலியா), காஞ்சனா (ஆஸ்திரேலியா), கஜன் (தென்னாபிரிக்கா), கோபிக்கா, பிரியங்கா (Uk), அரன், வரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியும், நீலன்,நவீன், மீரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மஹிந்த மலர் சாலையில் அஞ்சலிக்காக செவ்வாய் 30ம் திகதியும் புதன் 31 ஆம் திகதியும் காலை 9 மணிமுதல் மாலை 6:30 மணிவரை வைக்கப்பட்டு, தகனக்கிரியைக்காக வியாழக்கிழமை (01.09.2022) பிற்பகல் இரண்டு மணியளவில் கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**No. 12 A, Ebenezer place**
**Dehiwela**
**071 843 2017**

**தகவல் :**
**பிள்ளைகள்**

(cs 8687) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 15 - 05 - 1958

இறப்பு 30 - 08 - 2021



### அமரர் தம்பு பாலசுப்பிரமணியம்

எங்கள் பாசத்தின் அப்பாவே
எம்மை அன்புடன் அரவணைத்து வளர்த்தீர்கள்
எங்களைப் படிக்கவைத்து ஆளாக்கினீர்கள்
நாங்கள் தான் உங்கள் உலகம்
ஏன் எங்களை விட்டுச் சென்றீர்கள்
தவிக்கின்றோம் அப்பா தவிக்கின்றோம்
குடும்பத்தில் ஒளிவிளக்காய் திகழ்ந்து
பொறுப்புடன் இருந்தீர்கள் அப்பா
இப்போது ஒளி இழந்து இருக்கின்றோம் அப்பா
உங்கள் வெற்றிடத்தை நிரப்ப யாராலும் முடியாது
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டு அகலாது

**உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**உங்கள் நினைவால் துயருறும்**
**குடும்பத்தினர்**

(CS 20517) (3/6)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 01 - 01 - 1944

மறைவு 31 - 07 - 2022



கடந்த 31.07.2022 அன்று இறைபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்
அமரர்

### தாமோதரம்பிள்ளை கணேசன்

[ ஓய்வுபெற்ற யாழ்.மாநகரசபை உத்தியோகத்தர் ]

நாட்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
அம்மாவை பிரிந்த துயர் நீங்க முன்
உங்களையும் இழந்து விட்டோம் - ஏனப்பா
நீங்கள் விரைவாக நல்லூரான் பாதம் செல்ல வேண்டும்
என்று நினைத்து விட்டீர்களே!... உங்கள்

**ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

ஓம்சாந்தி!

**வாகையடி மேற்கு வீதி,**
**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

**நீங்கா நினைவுடன்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(CS 20464) (3/6)


# ஆட்டை சட்டவிரோதமாக இறைச்சியாக்கியவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 30

அளவெட்டிப் பகுதியில் ஆடொன்றை சட்டவிரோதமாக இறைச்சியாக்கிய நபர் கைது செய்யப்பட்டார் என்று தெல்லிப்பழைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

அளவெட்டி தெற்கு முருகைப்புலம் பகுதியில் ஆடொன்றை சட்டவிரோதமாக இறைச்சியாக்குகின்றனர் என்று தெல்லிப்பழைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அதன்போது சந்தேகநபரிடமிருந்து 24 கிலோகிராம் இறைச்சி கைப்பற்றப்பட்டது என்று தெரிவித்த தெல்லிப்பழைப் பொலிஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14-23)

# வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து கூரிய ஆயுதங்களால் தாக்குதல்

சாவகச்சேரி, ஓக. 30

நாவற்குழி தச்சன்தோப்பில் உள்ள வீடொன்றுக்குள் நேற்றுமுன்தினம் இரவு அத்துமீறி நுழைந்த வன்முறைக் கும்பல், அங்கிருந்தவர்கள் மீது கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான குடும்பத்தலைவர் அயலவர்களின் உதவியுடன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-9)


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18.02.1945

மறைவு 04.09.2016



### அமரர் V.P. வேலாயுதம்பிள்ளை

(முன்னை நாள் உதவி அரசாங்க அதிபர்)

திதி : வளர்பக்க திருதியை

தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தில் வந்துதித்த அப்பாவே - உம் பிரிவை
ஆற்றோம் எம் ஐயா அழுகின்றோம் ஓவென்று
தேற்றுவார் யாருமில்லை தேறுவதற்கும் வழியில்லை
மாற்றமாம் வையகத்து நியதியென நினைந்து
இறைவன் திருவடியில் இன்புற்றிருக்கவென
வேண்டி மனம் ஆறுகின்றோம்.

**இல.35/6, குமாரசாமி வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்**

**குடும்பத்தினர்**

(CS 6133) (3/6)


# தென்கோவை கற்பகப்பிள்ளையார் விநாயகர் சதுர்த்தி தீர்த்தவாரி

யாழ்ப்பாணம், ஓக. 30

இருபாலை கற்பகப்பிள்ளையார் சதுர்த்தி விசேட தீர்த்தவாரி நாளை புதன்கிழமை அதிகாலை 5.30 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

பக்தர்கள் ஆசாரசீலராக கற்பகப்பிள்ளையார் புஷ்பகரணியிலிருந்து புனித தீர்த்தத்தை குடங்களில் எடுத்து வந்து தங்களின் கைகளாலே தீர்த்த வாரி செய்யலாம். தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை நடைபெறும். ஆதனைத் தொடர்ந்து பெருமான் வீதியுலா வருவார். (ஒ-இ)

# கஞ்சாவுடன் இருவர் கைது!

பலாலி அன்ரனிபுரம் பகுதியில் பெருந்தொகையான கஞ்சாவுடன் இரண்டு பேர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலாலி அன்ரனிபுரம் பகுதியில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட கடற்படையினர், நேற்று அதிகாலை இரண்டு மணியளவில், ஹஸ்ஸ் வாகனமொன்றை வழிமறித்து சோதனை மேற்கொண்டனர். அதன்போது பெருந்தொகையான கஞ்சா கடற்படையினரால் மீட்கப்பட்டது.

ஹஸ்ஸ் வாகனத்தில் பயணித்த மானிப்பாய் மற்றும் மன்னார் பகுதியைச் சேர்ந்த இருவரையும் கைது செய்த கடற்படையினர், சந்தேகநபர்களை அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அத்துடன் அவர்கள் பயணித்த ஹஸ்ஸ் வாகனமும் மீட்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-23-20-26)


## விற்பனை பிரதிநிதி தேவை

**யாழ். மாவட்ட CoCo - Cola ஏக விநியோகத்தரான சிவா பிரதர்ஸ் நிறுவனத்துக்கு** விற்பனை பிரதிநிதி தேவை.
மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் அவசியமானது.

**076 352 0489, 077 391 5630**

## பெயர் மாற்றம்

பள்ளிக்குடா பூநகரியில் வசிக்கும் **மேரிகிறாடா** ஆகிய நான் எனது பெயரை **மேரிகில்டா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **மேரிகில்டா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(cs 43172) (2/6) மேரிகில்டா



## தசாக, கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் சுபகிருது வருடம் ஆவணி மாதம் 06 ஆம் நாள் (22.08.2022) திங்கட் கிழமை கிருஷ்ணபக்ஷ ஏகாதசி திதியில் இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் காசிப கோத்திரம்

### சதாசிவக் குருக்கள் பாலகுமாரசுவாமி சர்மா

அவர்களின் ஆத்ம சாந்தி கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

**தாசகம் ஆவணி 15ஆம் நாள் நாளை (31.08.2022) புதன்கிழமை காலை 10.00 மணி**
**ஏகோதிஷ்டம், மாசிகம் ஆவணி 16ஆம் நாள் எதிர்வரும் (01.09.2022) வியாழக்கிழமை)**
**சபிண்டீகரணம் ஆவணி 17ஆம் நாள் எதிர்வரும் (02.09.2022) வெள்ளிக்கிழமை**
**கிருஹயக்ஞம் ஆவணி 18ஆம் நாள் (03.09.2022) சனிக்கிழமை**

மேற்படி கிரியைகளில் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறும் தொடர்ந்து எதிர்வரும் (03.09.2022) சனிக்கிழமை நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

**சிவன் கோவிலடி,**
**புத்தூர் மேற்கு,**
**புத்தூர்.**

**குடும்பத்தினர்**
**தொ.பே: 077 190 8932,**
**077 328 4546**

(CS 20540) (3/6)





## வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் விஷேட பொதுக் கூட்டம்

- காலம் : 04.09.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி
- இடம் : ஆலய மண்டபம்
- தலைமை: திரு.க.கந்தசாமி அவர்கள் (தலைவர் பரிபாலனசபை)
- விடயம் : I. பாலஸ்தாபனம் தொடர்பான கலந்துரையாடல்
  II. பாலஸ்தாபனத்தின் பின்னரான திருப்பணிக்கு திருப்பணிச் சபை அமைத்தல்

சகல அங்கத்தவர்களையும் மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பரிபாலன சபையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

**கௌரவ செயலாளர்,**
**க.மு.வரதராஜா**
**பரிபாலனசபை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமையலாள் தேவை

யாழ்.நகரில் தனியார்
நிறுவனம் ஒன்றில் தனிநபர்
ஒருவருக்கு சமையல்
செய்யக்கூடிய ஒருவர் தேவை.
(சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்)
(பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்)

**070 356 7811**

## Tractor விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 25 Sri XXXX
விலை - 6 லட்சம்

**077 911 8101**

## VACANCY

**Receptionist (Female)**
முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் - 30,000 + உணவு
8.00 AM - 5.00 PM

**077 911 8101**

## பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு
வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு
பணிப்பெண் ஒருவர் தேவை.

**077 262 6944**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் வசிக்கும் தமிழ்க் குடும்பம்
ஒன்றுக்கு வீட்டுபணி வேலைகள்
செய்வதற்கு பணிப்பெண் தேவை. உணவு
தங்குமிடம் வழங்கப்படும்.

**077 386 6250**

## Calling for Expression of Interest (EOI) for Visiting Resource Person
## Master of Education Programme
## Faculty of Graduate Studies, University of Jaffna

Applications are invited from eminent scholars who fulfill the following requirements to undertake the position as Visiting Lecturer to teach the Master of Education Programme.

**Qualifications:**

1. A First or Second Class Honors degree in the relevant field.

**Or**

General /Special degree with Postgraduate Diploma in Education/Master of Education.

**And**

2. Master of Philosophy (MPhil)/Doctor of Philosophy (PhD) degree in Education.

**And**

3. Not less than five years of experience in one or more of the following:
I. Teaching at University Level.
II. Professional Experience in teaching for Postgraduate Studies.

**And**

4. Publications in the relevant field.

Interested eminent scholars with the required qualifications are expected to send their **self-prepared application along with Curriculum Vitae (CV)** and the **certified copies of the Educational and Professional Qualifications** to the Dean, Faculty of Graduate Studies, University of Jaffna on or before 15.09.2022.

**Registrar** 29.08.2022

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 06 - 12 - 2000

ஆண்டவன் மடியில் 30 - 08 - 2012



## துஷாந்தி சிறிசோமாஸ்கந்தன்

(வேம்படி மகளீர் உயர்தர பாடசாலை)

ஆண்டுகள் பத்து ஆனதம்மா எம் மகளே!
ஆண்டவன் அடி சென்றாய் விம்முகிறது எம் மனமே!
கள்ளமில்லா உன் முகத்தை காண்பதற்காய் ஏங்குகின்றோம்.

கண்மணியே! எம் துயர் துடைக்காயோ!
மாயும் உலகினிலே நோயினால் வீழந்தவளே!
கரையும் நொடியெல்லாம் உன் நினைவிலே கரைந்து போகின்றோம
கண்ணீரில் உன் நினைவுகளால்!

**செ.சிறி சோமாஸ்கந்தன்**
**சிறிசோமாஸ் அரைக்கும் ஆலை**
**300, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.**

**அன்பான**
**அப்பா, அம்மா, தம்பி**
**தங்கைமார்.**


## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** செயல்களில் இருந்த தடைகள் விலகும். செலவு அதிகரித்தாலும் அதற்கேற்ற வருமானம் வரும். முயற்சிகள் ஆதாயமாகும். சுய ஆற்றல் வெளிப்படும். எதிரிகள் பின் வாங்குவார்கள்.

**இடபம்:** வியாபாரத்தில் தடை விலகி நன்மை சேரும். பிள்ளைகளின் வழியே செலவு ஏற்படும். பணியிடத்தில் இருந்த சங்கடம் விலகும். அறிவாற்றல் வெளிப்படும்.

**மிதுனம்:** அரசுவழி முயற்சிகளில் எதிர்பார்க்கும்நன்மைகள்உண்டாகும். வழக்கு விவகாரம் சாதகமாகும். எதிர்பார்த்தவற்றை அடைவீர்கள். பொருளாதார நெருக்கடி விலகும்.

**துலாம்:** எதிர்பாராத வகையில் செலவு தோன்றும். அலைச்சல் அதிகரிக்கும். வீண் குழப்பம் வந்து செல்லும்.மனம் விரும்பாத சம்பவம் ஒன்று நடைபெறும். வாகனப் பயணத்தில் கவனம் தேவைப்படும்.

**விருச்சிகம்:** வரவு அதிகரிக்கும். எதிர்பார்த்தவற்றில் இலாபம் உண்டாகும். செயல்களில் வெற்றிகளை சந்திப்பீர்கள். நீங்கள் மேற்கொண்ட முயற்சியில் உங்களுக்கு சாதகமான நிலை ஏற்படும்.

**தனுசு:** வேலைக்காக முயற்சிப்பவர்களுக்கு நல்ல தகவல் வரும். தொழில் தொடங்கும் முயற்சியில் சிலர் ஈடுபடுவர்.உங்கள் ஆற்றல் வெளிப்படும். முயற்சியில் இருந்த தடைகள் விலகி நினைத்ததை அடைவீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்த அளவுக்கு வரவு வரும். வியாபாரத்தில் இலாபம் கூடும். துணிச்சலுடன் செயற்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.நீண்ட நாள் பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும்.

**சிம்மம்:** பொருள்களைக் கையாள்வதில் எச்சரிக்கை தேவை. உங்களுடைய பேச்சின் வழியே நன்மை தோன்றும். பொருளாதார நிலை உயரும். யோசிக்காமல் செயற்பட்டு சங்கடத்தை அடைவீர்கள்.

**கன்னி:** வேலையில் இருந்த இழுபறி முடிவுக்கு வரும். மனம் மகிழும்படியான சூழல் உருவாகும். வீட்டினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். திருமண வயதில் இருப்பவர்களுக்கு வரன் தேடி வரும்.

**மகரம்:** நெருக்கடிகள் விலகும். ஆர்வத்துடன் எதிர்பார்த்த ஒன்று ஆதாயமாகும். நிதிநிலை உயரும்.இரண்டு நாள்களாக இருந்த பிரச்சினைகள் விலகும். செயல்களில் வேகம் உண்டாகும்.

**கும்பம்:** மனதை பாதிக்கும் வகையில் சில சம்பவம் நடக்கும். கவனமுடன் செயற்படவேண்டிய நாள்.தேவையற்ற சங்கடம் தோன்றி சோர்வடைய வைக்கும். பயணத்தில் எச்சரிக்கையும் கவனமும் தேவை.

**மீனம்:** குழப்பங்கள் விலகி உற்சாகமாக செயற்படுவீர்கள். எதிர்பாலினரால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த ஒன்று நிறைவேறும். பணியிடத்தில் செல்வாக்கு கூடும். நண்பர்களால் நன்மை ஏற்படும்.

# நல்லூரில் தவறவிடப்பட்டவற்றை யாழ்.மாநகரசபையில் பெறலாம்

யாழ்ப்பாணம், ஓக. 30

நடைபெற்று முடிந்த நல்லூர் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழாவின் போது பக்தர்களால் தவறவிடப்பட்ட பெறுமதி வாய்ந்த பொருள்கள், ஆவணங்கள், ஏ.ரி.எம். அட்டைகள், பணப்பைகள், மணிக்கூடுகள், தேசிய அடையாள அட்டைகள், திறப்புக்கள் என்பன யாழ்ப்பாணம் மாநகர சபையின் தாபனக்கிளை அலுவலகத்தில் உள்ளன.

எனவே அவற்றின் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களுடன் உரிய அடையாளத்தை உறுதிப்படுத்தி மாநகர சபையின் தாபனக் கிளையில் பிற்பகல் 2 மணியிலிருந்து மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

(ஒ-14)

# யாழ்.நகர மேயர் கனடா பயணம்

யாழ்ப்பாணம், ஓக.30

யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணன் கனடா நாட்டிலுள்ள புலம்பெயர் அமைப்பொன்றின் அழைப்பின் பேரில் கனடாவுக்குப் பயணமாகியுள்ளார்.அவர் அடுத்த மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபை அமர்விலும் அவர் கலந்து கொள்ளவுள்ளார் என்று யாழ். மாநகர முதல்வர் அலுவலக தகவல்கள் தெரிவிக்கின்றன. மாநகர முதல்வர் வெளிநாடு பயணமாகியுள்ளதால் பிரதி முதல்வர் து.ஈசன் பதில் முதல்வராகப் பதவியேற்றுள்ளார்.

(எ-27)


## வேலையாட்கள் தேவை

A9 வீதி திருமுறுகண்டியில் இயங்கும் சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும். உணவு தங்குமிடம் வழங்கப்படும்.

- காசாளர்
- சமையலாளர்
- சுத்திகரிப்பாளர்
- சிட்டை எழுதுனர்
- உணவு பரிமாறுபவர்கள்

**077 386 6250**

## பணியாளர் தேவை

துப்புரவு பணியாளர் தேவை

**இன்று 30.08.2022 செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் மு.ப 9.00-பி.ப 3.00 மணி வரை நேரில் சமுகம் தரவும்**

**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



நிகழும் சுபகிருது வருடம் ஆடி மாதம் 17 ஆம் நாள் (02.08.2022) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### சிவஞானசுந்தரம் ராஜ்குமார்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 31.08.2022 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தவறவிடப்பட்டவர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

**"கண்ணன் இல்லம்" பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



பிறப்பு 14 . 10 . 1947

இறப்பு 28 . 08 . 2022

### ஐயாத்துரை பஞ்சாட்சரம் (ரிங்கர்-பஞ்சர்)


துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பஞ்சாட்சரம் அவர்கள் 28.08.2022 அன்று இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று கோண்டாவில் கலைவாணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**075 326 8725**

## மரண அறிவித்தல்



தோற்றம் 05 . 07 . 1946

மறைவு 29 . 08 . 2022

### நல்லையா பத்மநாதன் (பிறைசூடி)

(ஓய்வுபெற்ற அதிபர்– வேலணை கிழக்கு ம.வி)

நாரந்தனையை பிறப்பிடமாகவும், கலட்டி அம்மன் கோவிலடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா பத்மநாதன் (பிறைசூடி) அவர்கள் நேற்று (29.08.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரி, நடேஸ்வரி, காலஞ்சென்றவர்களான வசந்தானந்தன், தங்கவேல் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, கனகசுந்தரி ஆகியோரின் மருமகனும் குமரவல்லியின் அன்புக் கணவரும் பத்மரூபன், பத்மஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வகுமார், கஜீனா ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷயனின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவரான குமரேசன், குமாரவேல் (அவுஸ்திரேலியா), குமாரதாஸ் (நெதர்லாந்து) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.08.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் யாழ்.கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

**பத்மரூபன் (மகன்) - 077 361 4630/ 021 222 1792**
**பத்மஜா (மகள்) - 077 393 5318**

## மரண அறிவித்தல்



ஆண்டவன் படைப்பில் 23 . 07 . 1958

ஆண்டவன் அடியில் 28 . 08 . 2022

### உலகநாத செட்டியார் இராசரத்தினம் பரிபூரணானந்தன்

உடுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் பண்ணாகம், நீர்கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் பரிபூரணானந்தன் அவர்கள் 28.08.2022 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை செல்லக்கண்டு தம்பதியரின் அன்பு மருமகனும் யோகரஞ்சினியின் பாசமிகு கணவரும் லக்சாயினியின் பாசமிகு தந்தையும் நிரோஸ் அவர்களின் அன்பு மாமனாரும் ஹரிஷ் அவர்களின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பரிமளகாந்தன் (நோர்வே), சிவானந்தன் (நீர்கொழும்பு), செல்வானந்தன் (லண்டன்), ஜெயரூபி (டென்மார்க்), சுந்தரலக்சுமி (சுவிஸ்), தயாளினி (லண்டன்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2022) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்**

**பிரதான வீதி, பண்ணாகம், சுழிபுரம்**

**மருமகன் - 077 727 9179**
**தம்பி - 077 983 9429**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறைகிறது...

திகதி வரை தினமும் 2 மணித்தியாலம் 20 நிமிடம் மட்டுமே மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்றுவரை 3 மணி நேரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-5)

## தமிழ் - முஸ்லிம்...

தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன்.

'பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சின் இணையத்தளத்தில் மீண்டும் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் உள்வாங்கப்பட வேண்டும். பதிவாளர் நாயகத்தால் காணிப் பதிவுகளை கல்முனை தெற்கு பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்குமாறு அனுப்பப்பட்டுள்ள கடிதம் உடனடியாக மீளப்பெறப்படவேண்டும். கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்துக்குரிய கணக்காளர் நியமனம் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லாது விட்டால் வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் மக்கள் வீதியில் இறங்குவர்' என்றும் கஜேந்திரன் எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒட்டுமொத்த வடக்கு - கிழக்கு தமிழ் மக்களையும் கொதித்தெழ வைக்கும் செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக பிரிவானது 1989ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. 1993ஆம் ஆண்டில் அது பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டது. 30 ஆண்டுகளுக்கு மேலாக அது ஒரு பிரதேச செயலகமாகச் செயற்பட்டு வருகின்ற நிலையில் இன்று வரைக்கும் அந்தப் பிரதேச செயலகத்துக்குரிய கணக்காளர் நியமனம் இடம்பெறவில்லை. அதற்காக மக்கள் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்ற நிலையில் கடந்த வாரத்திலிருந்து பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சின் இணையத்தளத்தின் 'பிரதேச செயலகம்' என்ற பிரிவுக்குள் இருந்து கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தின் பெயர் நீக்கப்பட்டு கல்முனை தெற்கு பிரதேச செயலகத்தோடு உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடு தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் திட்டமிட்ட வகையில் ஒரு பகைமையை வளர்க்கின்ற நோக்கத்தோடு மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாகும். அமைச்சரவை தீர்மானத்தின் மூலமாக பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வந்த நிலையில் யாருடைய அனுமதியோடு பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சின் இணையத்தளத்தின் 'பிரதேச செயலகம்' என்ற பிரிவுக்குள்ளிருந்து கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தின் பெயர் ஏன் நீக்கப்பட்டது?

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் பகைமையை வளர்ப்பதற்காக கடந்த காலங்களில் அரசாங்கங்கள் திட்டமிட்ட ரீதியில் சில செயற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளன. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னர் பிரதமராக இருந்தபோது உயிர்த்த தினத் தாக்குதலுக்குப் பின்னர் அவர் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு வழங்கிய ஒரு வாக்கு மூலத்திலே தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் முரண்பாட்டை உருவாக்குவதற்காக முஸ்லிம் இளைஞர்கள் சிலர் பயன்படுத்தப்பட்டார்கள் என்ற விடயத்தை குறிப்பிட்டிருந்தார்.

அதேபோன்றதொரு செயற்பாடுதான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்த பின்னரும் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற கேள்வியுள்ளது.

ரணில் ஜனதிபதியாக வந்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவரைச் சந்தித்துள்ளது. அப்போது தாம் இந்த கல்முனை வடக்குத் தமிழ் பிரதேச செயலகம் தொடர்பில் பேசியதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கூறுகின்றனர். அதற்குப் பின்னரும் இவ்வாறான விடயங்கள் நடைபெறுகின்றன என்றால் இது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் ஒரு பகைமையை ஏற்படுத்துவதற்கான நோக்கமா?

அமைச்சுக்குப் பொறுப்பான பிரதமர் தினேஷ் குணவர்த்தனதான் இந்த நடவடிக்கைக்கு அனுமதி கொடுத்தாரா என அவரிடம் இங்கு கேட்கின்றேன். இது பிரதமராக நீங்கள் செய்யும் காரியமா? இங்கிருக்கும் நீதி அமைச்சரின் கவனத்துக்கும் இந்த விடயத்தை நான் கொண்டு வருகின்றேன் - என்றார். (அ-ஓ-22)


### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 12 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- கைதடி சந்தியிலிருந்து 750 M தூரத்தில்
- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி.

076 7558 606, 077 259 0391

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 51 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.

- நான்கு பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்ட் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை இரண்டு இலட்சம் 200,000/= மட்டும்.

தொடர்பு: 077 911 6983, 077 148 8348

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 168 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- 775 இலக்க வழி பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
  விவசாயம் செய்வதற்கும், வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை இரண்டு இலட்சம் (200,000) மட்டும்.

தொடர்பு: 077 6585 999, 076 4385 814, 077 8748 135


## ஆட்சேபணை...

மன்னார் மாவட்டச் செயலரிடம் மின்சக்தி எரிசக்தி அமைச்சால் கோரப்பட்டுள்ளது.

காற்றாலை மின் உற்பத்தி திட்டத்துக்கான சூழல் மதிப்பீடு என்பன மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களின் அபிப்பிராயங்களும் பெறப்பட்டு ஆட்சேபணைச் சான்றிதழ் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (அ-ஓ-5)

## இடைக்கால...

சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சின் மத்தியில் நெருக்கடியில் சிக்குண்டுள்ள நாட்டை இந்த வருட இறுதிவரை நிர்வகிப்பதற்கான இடைக்கால வரவு - செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்கும்போதே ஜனாதிபதி செலவினங்களை குறைக்கும் அறிவிப்பை வெளியிடவுள்ளார்.

செலவினங்கள் சில நூறு பில்லியன் ரூபாவால் குறைக்கப்படும். குறிப்பாக, ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புக்குரிய செலவினங்களும் குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நிதியமைச்சராகவும் பதவி வகிக்கும் ஜனாதிபதி நிதி நெருக்கடியால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தவர்களுக்கு ஆதரவான திட்ட முன்னெடுப்புக்களை வெளியிடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய வரிகள், கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்ட அல்லது நீக்கப்பட்ட வரிகள் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும். அது தொடர்பான அறிவிப்புக்கள் இன்றைய வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தப்படவுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையி லான அரசாங்கத்துக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையிலேயே இந்த ஆர்ப்பாட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-இ)

## பொருளாதார...

இந்த வருடத்தின் கடந்த சில மாதங்களில் இரண்டு பிரதான உள்ளூர் மதுபான உற்பத்தி நிறுவனங்களின் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ள தாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முக்கியமான காரணம், மக்கள் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளமையே.

இந்தக் காலப்பகுதியில் சட்டவிரோத மதுபானங்கள் விற்பனை அதிகரிக்கலாம் என்பதால், சட்டவிரோத மது விற்பனையை கட்டுப்படுத்த அதிகாரிகளை நியமித்து, நாடு தழுவிய ரீதியில் சோதனைகளை முன்னெடுத்து வருவதாகவும் மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-ஓ-இ)

## மன்னாரில்...

அமைக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு ஏற்பாடு செய்த மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டதோடு, மீனவ அமைப்புகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சர்வமதத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மதியம் 12 மணி வரை பஜார் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டதோடு, தனியார் போக்குவரத்துச் சேவைகளும் இடை நிறுத்தப்பட்டிருந்தன.

கனிய மணல் அகழ்வால் எதிர்காலத்தில் மன்னார் தீவுப் பகுதியில் பல்வேறு இடர்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகும். காற்றாலை ஊடான மின் உற்பத்திக்கான கோபுரங்கள் அமைக்கப்படுவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் எதிர்காலத்தில் முழுமையாகப் பாதிக்கப்படும் என மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையின் அழகிய தீவு அரக்கர்கள் பிடியில், இந்தச் சிறிய தீவின் நிலப்பரப்பில் கனிய மண் அகழ்ந்து இத்தீவு முழுவதுமாக கடலில் மூழ்கடிக்கும் செயற்பாட்டை உடன் நிறுத்து, காற்றாலை மின் கோபுரங்களை அமைத்து மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் செயற்பாட்டை உடன் நிறுத்து, எம்மை உயிருடன் வாழவிடு, ஆர்ப்பாட்டமே எங்கள் வாழ்க்கையா? உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தை தொடர்ந்து கனிய மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் ஆகியவற்றுக்கு எதிராக மக்களிடம் கையெழுத்து பெற்றுக் கொள்ளப்பட்டு, ஜனாதிபதிக்கான மனு மன்னார் மாவட்டச் செயலரிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ஓ-56-60-213)

## காணாமல்...

கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டோரைத்தேடி தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் இடங்களில் இந்தப் போராட்டம் இன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய தினம் காலை 9 மணிக்கு வடக்கு - கிழக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மருத்துவமனை முன்றிலில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதே வேளை யாழ். மாவட்டத்தில் நாவலர் வீதியில் உள்ள யு.என்.எச்.சி.ஆர். அலுவலக முன்றிலிலும் மற்றும் யாழ். நகரிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலிலும், வவுனியாவில் வவு .குடியிருப்பு பிள்ளையார் கோவில் முன்றிலிலும், மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர்ப்பகுதியிலும், அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் மணிக்கூட்டு கோபுர பகுதியிலும், திருகோணமலையில் திருமலை மாவட்டச் செயலக முன்றிலிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதேவேளை புலம்பெயர் தமிழர்கள் வாழும் தேசங்களான கனடா, அமெரிக்கா, ஜேர்மன், லண்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ஓ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TECHNA
## Technical Institute
## A/L தொழினுட்பப்பிரிவு

பாராட்டி வாழ்த்துகின்றோம்

### பொறியியல் தொழினுட்பப்பிரிவு

| NAME | RESULT | RANK |
|---|---|---|
| S.Vithurshan | 3A | 2 |
| S.Vithursan | 2A B | 3 |
| P.Kajeethan | 2A B | 5 |
| S.Arooran | A 2B | 7 |
| N.Tharmikan | A 2B | 10 |
| T.Rumekanth | 2B C | 18 |
| K.Lathushan | 2B C | 25 |
| S.Sharankan | A B C | 33 |
| R.Dinthushan | 2B C | 36 |
| S.Priyatharshan | ABS | 38 |

| NAME | RESULT | RANK |
|---|---|---|
| S.Hari kishore | B 2C | 40 |
| M.Kajanthan | 2B S | 41 |
| S.Kabilkanthan | B 2C | 49 |
| K.Rensika | B 2C | 51 |
| T.Nilavini (Kili) | 2B C | 3 |
| V.Sarukan (Kili) | B 2C | 5 |
| T.Kirushna (Mullai) | C 2S | 6 |
| M.Rakulan(Ampara) | 2A C | 8 |
| J.Sharin Anne(Vavu) | 3C | 8 |
| S.Yuventhinika(Vavu) | B C S | 9 |
| S.Hameetha(N.E) | A 2B | 13 |

### உயிர்முறைமை தொழினுட்பப்பிரிவு

| NAME | RESULT | RANK |
|---|---|---|
| K.Jayanthika | 3B | 11 |
| S.Kamsha | A B C | 13 |
| R.Kajana | A 2C | 14 |
| B.Thiviya | A 2C | 18 |
| V.Thiluxshana | B 2C | 19 |
| S.Kethusha | 2B C | 20 |
| J.Lathusha | B 2C | 29 |
| V.Priyanka | 2C S | 37 |
| M.Vithusa | B 2C | 39 |

| NAME | RESULT | RANK |
|---|---|---|
| B.Shahana | 3C | 42 |
| R.Sharuka | 2C S | 43 |
| V.Sathurshana | 2C S | 46 |
| S.Pirunthapan | 2C S | 47 |
| V.Vishopika | B C S | 48 |
| R.Shakithiyan | 2C S | 49 |
| P.Tharanithan(Mullai) | 2A B | 2 |
| A.Amina (Hatton) | B 2C | 34 |
| A.F.Sifani (Mannar) | B 2C | 8 |
| A.F.Rizna (Batti) | 2B C | 16 |

A/L 2022 REPEAT BATCH
வகுப்புக்கள் ஆரம்பம்
03.09.2022 சனிக்கிழமை
A/L 2023, A/L 2024 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

வீரசிங்கம் மண்டபம்,
யாழ்ப்பாணம்
077 170 3549

# TECHNO WORLD
## தொழில்நுட்ப கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

TECHNO WORLD
INNOVATIVE IDEAS OPEN NEW WORLD

இம்முறை தேசிய, மாவட்ட ரீதியில் முதல் நிலை பெற்ற மாணவர்கள் தொடர்ந்தும்
ஐந்தாவது முறையாகவும் முன்னிலையில்

### உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்

01) ஹரிகரன் 3A 01 Jaffna
02) S.தங்குயில் 2AB 01 Mullai
03) K.பிரணகா 3C 01 Kili
04) S.மயூரி B2C 01 Mullai
05) கன்யா 3B 04
06) நவரசி A2B 04
07) நிறைமதி 3C 05
08) நிறோஜினி 2BC 06
09) சியாமளா B2C 08
10) சசிகா 2CS 09
11) கஜானா 3C 09
12) தனுசா 2BS 09
13) விஸ்வரூபினி A2B 12
14) சவானா 2CS 04
15) யதுர்சிகா 2CS 04
16) P.பர்மிலன் 3B 16
17) K.கஜானி C2S 18
18) N.அனுசா C2S 18
19) S.நிறோஜ் 2BC 21
20) கஜேந்தினி 3S 20
21) M.திவ்யா 2BC 23
22) கனிஸ்ரன் 3S 24
23) தரணிதரன் B2C 24
24) ஜங்கரன் B2C 25
25) நிஸ்ரினா 2BC 25
26) R.ருக்சனா 2CS 09
27) துசிதா 3C 32
28) கஜானன் 3C 35
29) கேசவன் BCS 40
30) M.ஆயிஷா 43
31) சாருயா B2C 44

### பொறியியல் தொழில்நுட்பம்

01) விதுசன் 2BC 01
02) மசின் ABC 02
03) பவாஸ் 2BC 02
04) S.விதுசன் 03
05) G.நிதுசன் BCS 03 (Mullai)
06) T.கிரிசன் 2AB 04
07) றாகுலன் 3C 07
08) டனுஸ்ரன் 3C 07
09) T.கிரிசாந் 2AC 08
10) பிரியராம் 2AC 08
11) சாம்சன் 2AB 09
12) கிலோன் ராஜ் 3C 10
13) தர்மிகன் A2B 10
14) S.கௌசிகன் ABC 13
15) P.கஜிந்திகன் A2B 12
16) S.பிரகாஸ் 3B 14
17) S.லவன் 2BC 15
18) M.அன்பரசன் 3B 16
19) பகிரதன் 2AB 19
20) அபிசன் B2S 19
21) டிலக்ஷன் 2CS .30
22) குயின்ரா 2BC 35
23) டிந்துசன் 2BC 36
24) A.பிரசாந் C2S 30
25) S.லோசன் 3S 40
26) M.கஜந்தன் 2BS 41
27) கஜன்ராஜ் 3C 46
28) பாத்திமா ஜெஸ்ரா ABC 47
29) ஜெனாந்தன் B2C 48

புதிய பிரிவுகள் A/L 2024
A/L 2022 DAY CLASS வகுப்புக்கள் ஆரம்பம்
திகதி 04.09.2022 நேரம் 9.30 AM

077 017 5346

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில் பிரசித்திபெற்ற மண்கும்பான் வீரகத்தி பிள்ளையார் கோயில் அருகாமையில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு
- சாட்டி கடற்கரைக்கு செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ளது.
- யாழ். நகரிலிருந்து 8 KM தூரத்தில் உள்ளது.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலை -யில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- வீடுகள் அமைப்பதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
**தரகர் தேவையில்லை.**

## தொடர்பு:- ஜெயம்
## 077 8147 389
## 077 2417 589


# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 29 . 07 . 1956 | | 27 . 08 . 2022 |



## அமரர் திருமதி சிறீதரராஜா லங்காதேவி
(தாதிய உத்தியோகத்தர் – பிரதேச வைத்தியசாலை, கரவெட்டி)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் தேவமாதா கோவில் ஒழுங்கை. தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி சிறீதரராஜா லங்காதேவி (தாதிய உத்தியோகத்தர் - பிரதேச வைத்தியசாலை. கரவெட்டி) அவர்கள் கடந்த (27.08.2022) சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா மீனாட்சியம்மா அவர்களின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் அன்னபாக்கியம் அவர்களின் அன்பு மருமகளும், சிறீதரராஜா அவர்களின் பாசமிகு துணைவியும், நிமாலி, செந்தூரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சி.திவ்யா அவர்களின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் தும்பளை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தேவமாதா கோவிலடி,
தும்பளை,
பருத்தித்துறை

தகவல்:
குடும்பத்தினர்
021 226 4927, 076 604 1662

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org